**நவம்பர் – 18**

# TNPSC துளிகள்

- புவனேஸ்வர் நகரில் உள்ள தேசியப் பழங்குடியின மாணாக்கர் கல்விச் சங்கம் (NESTS) ஆனது 5வது தேசிய EMRS கலாச்சார மற்றும் இலக்கிய விழா மற்றும் கலா உத்சவ் நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்தது.
- இந்தியாவில் மீன் உற்பத்தியானது, கடந்த 10 ஆண்டுகளில் (2014-2024) சுமார் 96 லட்சம் டன்னிலிருந்து 176 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது.
- அமுல் நிறுவனமானது தனது தயாரிப்புகளை அமெரிக்க நாட்டில் தற்போது அறிமுகப் படுத்தியதை அடுத்து, இந்த மாத இறுதிக்குள் ஐரோப்பியச் சந்தையிலும் தனது தயாரிப்புகளை அறிமுகப்படுத்த உள்ளது.
- ஜப்பானின் ஸ்கேர்குரோ இன்கார்பரேட்டட் நிறுவனம் ஆனது, பின்ஃபெனோன் (S)® எனப்படும் உலகின் முதலாவது விலங்குகளுக்கான ஒரு ஊட்டச்சத்து குறை நிரப்பு மருந்திற்கான (supplement) காப்புரிமையைப் பெற்றுள்ளது.

# தேசியச் செய்திகள்

## இந்தியா மற்றும் பிலிப்பைன்ஸ் - 75 ஆண்டு கால தூதரக உறவு




- இந்தியா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் தங்களது அரசுமுறை உறவுகளின் 75வது ஆண்டு விழாவினைக் கொண்டாடின என்பதோடு அந்த சிறப்பு நிகழ்வினை நினைவு கூரும் வகையில் ஒரு சிறப்பு சின்னத்தினையும் அவை வெளியிட்டன.
- இரு நாடுகளுக்கும் இடையிலான ஒரு நீடித்த நட்பு, கலாச்சாரப் பிணைப்புகள் மற்றும் பகிரப்பட்ட விழுமியங்களை இந்த இணைச் சின்னம் (இரு நாடுகளின் இணைவினை குறிக்கும் வகையிலான) அடையாளப்படுத்துகிறது.

- இந்தியா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய இரு நாடுகளும் 1949 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் தேதியன்று இரு நாடுகளும் அவை சுதந்திரம் பெற்ற சிறிது காலத்திலேயே அதிகாரப் பூர்வமான அரசுமுறை உறவுகளை ஏற்படுத்திக் கொண்டன.

## சட்டவிரோத முறையிலான சொத்துத் தகர்ப்பு குறித்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு




- குடிமக்களின் சொத்துக்களை (கட்டிடங்களை) தகர்ப்பதற்கு உரிய நடைமுறைகள் பின்பற்றப் படுவதை உறுதி செய்வதற்கான வழிகாட்டுதல்களை உச்ச நீதிமன்றம் வகுத்துள்ளது.
- உச்ச நீதிமன்றம் ஆனது, வெளிப்படைத்தன்மைக்கு முக்கியத்துவம் அளித்து, குற்றம் சாட்டப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு அவர்களது சொத்து மற்றும் இன்ன பிற விவகாரங்களைக் கையாளுவதற்குப் போதுமான அவகாசம் அளிக்கிறது.
- இந்த வழிகாட்டுதல்கள் என்பது, "சாலைகள், தெருக்கள், நடைபாதைகள், இரயில் பாதைகள் அல்லது நதிகள் அல்லது நீர்நிலைகள் போன்ற எந்தவொருப் பொது இடத்திலும் அமைக்கப் பட்டுள்ள அங்கீகரிக்கப்படாதப் பல கட்டமைப்புகள் மற்றும் நீதிமன்றத்தினால் தகர்ப்பிற்கான உத்தரவு வழங்கப்பட்ட பகுதிகள் ஆகியவற்றிற்குப் பொருந்தாது".
- ஒரு உரிமையாளர் அந்த கட்டமைப்பு குறித்து பதிலளிப்பதற்காக, அந்தக் கட்டமைப்பு இடிக்கப்படுவதற்கு முன்பே மிக குறைந்தபட்சம் 15 நாட்களுக்கு முன்னதாக அவருக்கு அறிவிப்பு அறிக்கை அனுப்பப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- இந்த 15 நாட்கள் கெடுவானது, உரிமையாளர் அல்லது ஆக்கிரமிப்பாளர் அறிவிப்பு அறிக்கையினைப் பெற்ற தேதியிலிருந்து தொடங்கும்.
- இந்த அறிவிப்பு அறிக்கையில், கட்டமைப்பின் விவரங்கள், அது ஏன் இடிக்கப்படுகிறது, மற்றும் உரிமையாளர்கள் இடிக்கப்படுவதை எதிர்த்து வாதிட அனுமதிக்கச் செய்யும் "தனிப்பட்ட விசாரணை" தேதி ஆகியவை இடம் பெற்றிருக்க வேண்டும்.
- இந்த வழிகாட்டுதல்களை மீறுவது, இழப்பீடு நிர்ணயிப்புடன் கூடிய பல அவமதிப்பு நடவடிக்கைகளுக்கு வழி வகுக்கும் என்று நீதிமன்றம் கூறியது.

## DRDO அமைப்பின் LRLACM


- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) ஆனது, தனது நீண்ட தூர தரை வழித் தாக்குதல் ரக சீர்வேக வகையிலான எறிகணையின் (LRLACM) முதல் ஏவுதல் சோதனையை வெற்றிகரமாக மேற்கொண்டது.

- LRLACM ஆனது எளிதில் இடம் விட்டு இடம் கொண்டுச் செல்லக்கூடிய தரைவழி அமைப்புகள் மற்றும் கப்பல்கள் ஆகிய இரண்டிலிருந்தும் நன்கு ஏவப்படும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- LRLACM ஆனது அதன் செயல்திறன் மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்தும் அதி நவீன வான்பயண மின்னணுவியல் (avionics) மற்றும் மென்பொருள் கட்டமைப்பினைக் கொண்டுள்ளது.




# சர்வதேசச் செய்திகள்

## COP 29 - புதிய கூட்டு அளவு சார் இலக்கு (NCQG)





- ஐக்கிய நாடுகள் சபையின் பருவநிலை மாற்றம் குறித்த உச்சிமாநாடு (COP29) ஆனது புதிய கூட்டு அளவு சார் இலக்கின் (NCQG) புதிய வரைவினை வெளியிட்டுள்ளது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் வளர்ந்து வரும் நாடுகளுக்கு சுமார் 5-6.8 டிரில்லியன் டாலர் வரவினைப் பெற்றுத் தருவதை இது இலக்காகக் கொண்டுள்ளது.

- முன்னதாக வெளியிடப்பட்ட இதன் முதல் பதிப்பு ஆனது வளர்ந்து வரும் நாடுகளால் நிராகரிக்கப் பட்டது.
- வளர்ந்து வரும் நாடுகளுக்கு அவற்றின் தனித்துவமானப் பருவநிலை தகவமைப்பு மற்றும் நிகர சுழிய மாற்றத்திற்கு ஆண்டிற்கு 1.5 டிரில்லியன் டாலர் வரை தேவைப் படுகிறது.
- இருப்பினும், பருவநிலை நடவடிக்கைக்கான உண்மையான நிதித் தேவையானது 1-1.5 டிரில்லியன் டாலர் என்ற மதிப்பீட்டை விட பல மடங்கு அதிகமாக இருக்கலாம்.
- 153 வளர்ந்து வரும் நாடுகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய 2030 ஆம் ஆண்டில் மொத்தம் 5.8-5.9 டிரில்லியன் டாலர்கள் தேவைப்படும் என்று UNFCCC நிதி நிலைக்குழு மதிப்பிட்டுள்ளது.
- உலக வங்கி உட்பட 10 பன்னாட்டு மேம்பாட்டு வங்கிக் குழு, தங்களின் ஒட்டு மொத்தப் பருவநிலை நிதி ஒதுக்கீடு ஆனது 2030 ஆம் ஆண்டிற்குள் ஆண்டிற்கு 170 பில்லியன் டாலரை எட்டும் என்று கணித்துள்ளன.
- 70 சதவீதத்திற்கும் அதிகமானத் தொகையானது (120 பில்லியன் டாலர்) குறைவான மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட சில நாடுகளுக்கு வழங்கப்பட நேரிடும் என எதிர்பார்க்கப் படுகிறது.

# பொருளாதாரச் செய்திகள்

## மாநகராட்சி அமைப்புகளின் நிதி குறித்த அறிக்கை

Chart 1: Components of revenue receipts of all municipal corporations. The inner circle corresponds to figures for 2019-20 while the outer circle corresponds to 2023-24 (BE)




- இந்திய ரிசர்வ் வங்கியானது (RB) மாநகராட்சி அமைப்புகளின் நிதி நிலை குறித்த அதன் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின் கருத்துரு, "Own Sources of Revenue Generation in Municipal Corporations: Opportunities and Challenges - மாநகராட்சிக் கழகங்கள் அதன் சொந்த வருவாயினை ஈட்டுவதற்கான மூலங்கள்: வாய்ப்புகள் மற்றும் சவால்கள்" என்பதாகும்.
- 2023-24 ஆம் ஆண்டில் வசூலான மொத்த வருவாயில், சொத்து வரி, தண்ணீர் வரி, மின்சார வரி, கல்வி வரி மற்றும் பிற உள்ளாட்சி வரிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய சொந்த வரி வருவாய் ஆனது 30 சதவீதமாக இருந்தது.
- அதிகரித்து வரும் நகர்ப்புற மக்கள்தொகையுடன், நகர்ப்புறங்களில் உயர்தர பொதுச் சேவைகளுக்கான தேவை வேகமாக வளர்ந்து வருகிறது என்று இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- வருவாய் வரவுகளின் உயர்வு ஆனது, 2022-23 ஆம் ஆண்டில் 3.7 சதவீதமாக இருந்தது (திருத்தப்பட்ட மதிப்பீடு) என்ற நிலையில் இது 2023-24 ஆம் ஆண்டில் 20.1 சதவீதம் ஆக

அதிகரிக்கும் என நிதி நிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- 2023-24 ஆம் ஆண்டில் கூடுதலாக மகாராஷ்டிரா, குஜராத், கர்நாடகா, மத்தியப் பிரதேசம், ஹரியானா மற்றும் தெலுங்கானா போன்ற சில மாநிலங்களில் உள்ள மாநகராட்சிக் கழகங்களுக்காக (11,104 கோடி ரூபாய்) 1,000 கோடி ரூபாய்க்கு மேல் தொகை ஒதுக்கப்பட்டது.
- டெல்லி, ஆந்திரப் பிரதேசம், இராஜஸ்தான், ஒடிசா, மேற்கு வங்காளம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் உள்ள மாநகராட்சிக் கழகங்களில் கூடுதலாக 100 கோடி ரூபாய் (தமிழ்நாடு) முதல் 687 கோடி ரூபாய் (டெல்லி) வரையில் ஒதுக்கப் பட்டு உள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டில் திரிபுரா, ஜார்க்கண்ட், இமாச்சலப் பிரதேசம், பீகார், சத்தீஸ்கர், ஜம்மு மற்றும் காஷ்மீர், உத்தரப் பிரதேசம் மற்றும் கேரளாவில் உள்ள மாநகராட்சிக் கழகங்களில் உள்ள வருவாய் பற்றாக்குறைக்காக (-) 2 கோடி ரூபாய் (திரிபுரா) முதல் (-) 789 கோடி ரூபாய் (கேரளா) ஒதுக்கப் பட்டது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## யுரேனஸ் கோளின் மர்மமான காந்தப் புலம்





- நாசாவின் எந்திரவிய விண்கலமான வாயேஜர் 2 ஆனது 1986 ஆம் ஆண்டில் யுரேனஸ் கோளைச் சுற்றி ஐந்து நாட்கள் பறந்து ஆய்வு செய்தது.
- வாயேஜர் 2 விண்கலத்தின் கண்காணிப்புத் தகவல்கள் ஆனது யுரேனஸின் காந்த மண்டலத்தைப் பற்றிய தவறான விளக்கத்தினை ஏற்படுத்தியது.
- அந்தக் கோளைச் சுற்றி அக்கலம் பறக்கும் போது, அதன் காந்த மண்டலம் ஆனது பிளாஸ்மா இல்லாததாகவும் மற்றும் அதிக ஆற்றல் வாய்ந்த எலக்ட்ரான்களின் அசாதாரணச் செறிவு கொண்ட மண்டலங்களைக் கொண்டுள்ளது எனவும் கண்டு அறிந்தது.
- ஆய்வுக் கலம் ஆனது ஓர் அசாதாரண சூழ்நிலையில் - ஒரு தீவிர சூரியக் காற்று நிகழ்வு – அந்தக் கோளைச் சுற்றி வந்ததால் அது யுரேனஸ் மற்றும் குறிப்பாக அதன் காந்தப்புலம் பற்றிய தவறான கணிப்புகளுக்கு வழிவகுத்தது.
- எனவே, இந்த நிகழ்வு ஆனது கலத்தின் கண்காணிப்பின் போது யுரேனஸின் காந்த மண்டலத்தைச் சுருக்கியது.
- இங்கு பிளாஸ்மா இல்லாததால், துணைக் கோள்கள் செயலற்ற நிலையில் இருப்பதாக

அறிவியலாளர்கள் நம்பினர்.

- ஆனால் புதியக் கண்டுபிடிப்புகள் ஆனது, யுரேனஸின் ஐந்து பெரியத் துணைக் கோள்கள் புவியியல் ரீதியாகச் செயலற்றதாக இருக்காது என்று கூறுகின்றன.
- காந்தமண்டலம் என்பது கிரகத்தின் காந்தப்புலம் ஆதிக்கம் செலுத்தும் ரீதியில் ஒரு கிரகத்தைச் சுற்றியுள்ள விண்வெளிப் பகுதியாகும்.
- இது சூரிய மற்றும் அண்டத்துகள் கதிர்வீச்சுக்கு எதிராக ஒரு பாதுகாப்பு மண்டலத்தை உருவாக்குகிறது.
- யுரேனஸ் ஆனது அதன் உள்ளே 63 பூமிகளைப் பொருத்தும் அளவுக்கு பெரியதாகும்.
- இது பூமியை விட சுமார் 20 மடங்கு அதிகமான தொலைவில் சூரியனைச் சுற்றி வருவதோடு இது தற்போது 28 அறியப் பட்டத் துணைக் கோள்கள் மற்றும் இரண்டு வளைய அமைப்புகளைக் கொண்டுள்ளது.

## போஸ்-ஐன்ஸ்டீன் புள்ளிவிவரங்கள் - 100வது ஆண்டு




- 1924 ஆம் ஆண்டில், சத்யேந்திர நாத் போஸ், ஃபோட்டான் (ஒளியின் துகள்கள்) தொகுப்புகளின் செயல்பாடுகள் பற்றி அறிவதற்கான சரியான சமன்பாடுகளின் ஒரு தொகுப்பைக் கண்டுபிடித்தார்.
- ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் அதனை ஜெர்மன் மொழியில் மொழிபெயர்த்து அதனை ஒரு பத்திரிகைக்கு அனுப்பினார்.
- இந்த ஆண்டானது போஸ் அவர்களின் கண்டுபிடிப்பின் 100வது ஆண்டு நிறைவினைக் குறிக்கிறது.
- ஆல்பர்ட் ஐன்ஸ்டீனுடனான அவரது ஒத்துழைப்பு இறுதியில் B-E புள்ளிவிவரங்களை முன் வைக்க வழி வகுத்தது.
- கிடைக்கக் கூடிய ஆற்றல் நிலைகளில் துகள்கள் எவ்வாறு தங்களைப் பரவச் செய்கின்றன என்பதை இது விளக்குகிறது.
- B-E புள்ளியியல் கொள்கைக்கு இணக்கமான வகையிலான துகள்கள் ஆனது S.N போஸ் அவர்களின் நினைவாக "போசான்ஸ்" என்று குறிப்பிடப்படுகின்றன.


# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஆப்பிரிக்க யானைகள் பற்றிய அறிக்கை


- ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதி முழுவதும் உள்ள கணக்கெடுக்கப்பட்ட சில இடங்களில் சவன்னா (புல்வெளி) வாழ் யானைகளின் மீதான எண்ணிக்கையானது சராசரியாக 70% குறைந்துள்ளதாகச் சமீபத்திய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.
- இதில் வனவாழ் யானைகளின் எண்ணிக்கையானது சுமார் 90% குறைந்துள்ளது என்ற

நிலையில் இதற்கு வேட்டையாடுதல் மற்றும் வாழ்விட இழப்பு ஆகியவை சில முக்கிய காரணிகளாக உள்ளன.

- ஒட்டு மொத்தமாக, கணக்கெடுக்கப்பட்ட இந்தத் தளங்களில் இரண்டு இனங்களிலும் சராசரியாக 77% எண்ணிக்கை குறைவு பதிவாகியுள்ளது.
- தென்னாப்பிரிக்காவில், சவன்னா யானைகளின் எண்ணிக்கை சராசரியாக சுமார் 42 சதவீதம் அதிகரித்துள்ளது.
- கிழக்கு ஆப்பிரிக்காவில் கணக்கெடுக்கப்பட்ட யானைகளின் எண்ணிக்கையில் மட்டுமே 10 சதவீதம் அதிகரிப்பு பதிவாகியுள்ளது.




## கூடு வடிவ இழுது மீன்கள்




- பிறப்பு, முதுமை மற்றும் இறப்பு என்ற வழக்கமான சுழற்சியை முறிக்கும் ஒரு கடல் வாழ் முதுகெலும்பில்லாத புதிய உயிரினத்தை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- அவை டெனோபோறே நெமியோப்சிஸ் லெய்டியி என்றும் அழைக்கப்படுகின்றன, என்பதோடு இவை வயது முதிர்வை மீறி, அவற்றின் இளம் வடிவங்களுக்குத் திரும்பும் திறன் கொண்டுள்ளன.
- வயது முதிர்ந்த கூடு வடிவ இழுது மீன்கள் (ஜெல்லி மீன்) தீவிர மன அழுத்தத்திற்கு உள்ளாகும் போது அவை லார்வா நிலையை அடைகிறது.

- கூடு வடிவ இழுது மீன்களின் தோற்றம் ஆனது 700 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே இருக்கலாம் என்று கணக்கிடப்படச் செய்வதால் முதல் முறையாக புவியில் தோன்றிய விலங்குகளில் ஒன்றாக இது இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★